புதினப்பத்திரிகையாக
பதிவுசெய்யப்பெற்றது

இந்துசாதனம்.

விரோதி௵ (1889)
ஆவணி௴ ௨௳
ஆரம்பமானது.

பத்திரக் கிரயம்.
யாழ்ப்பாணப் பட்டினம்: ஆ 1-க்கு ரூ. 5-00
இலங்கை, இந்தியா: „ ரூ. 8-00
தொலைவாய்ப்பகுதி: „ ரூ. 9.00
தனிப்பிரதி: சதம் 5
முற்பணம் அனுப்புவோருக்கே பத்திரிகை அனுப்பப்படும்.

THE HINDU ORGAN.

சோமவாரத்திலும், குருவாரத்திலும் பிரசுரமாகும்.

"எனைத்தானு நல்லவைகேட்க வனைத்தானு, மான்ற பெருமை தரும்,"

விளம்பர விகிதம்.
முதன்முறைக்கு:—ஒருகலம் ரூ.10-00
„ அரைக்கலம் ரூ. 4-50
„ கால்கலம் ரூ. 3-00
அடுத்த முறைகட்கு டை விகிதங்களிற் பாதி.
விளம்பரங்கள் முற்பண மனுப்பினலன்றிக் கவனிக்கப்படா

புத்தகம்—௪௨. } யாழ்ப்பாணம்;-பிரமோதூத௵ ஆவணி௴ ௨௳, (1930 ஆகஸ்டு 18) திங்கட்கிழமை. { இலக்கம்—௧௬.

உ
கணபதி துணை.

சீர்பூத்த கருவிநா னுணர்ச்சி தேங்கச்
சிவம்பூத்த நிகமாக மங்க ளோங்கப்
பார்பூத்த புறச்சமய விருள்க ணீங்கப்
பரம்பூத்த சைவநிலை பாரோர் தாங்கப்
பேர்பூத்த சிவானந்தத் தினிது தூங்கப்
பிறைபூத்த சடைமவுலிப் பிரானளித்த
வார்பூத்த வறிவிச்சை தொழிலென்றோது
மதம்பூத்தவிநாயகன்றாள் வணங்கிவாழ்வாம்.

வாழ்க வந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

ஸ்ரீ கதிர்காமம்
கதிரமலைத் தண்ணீர்ப்பந்தர்த்
திருப்பணித் தர்ம இயல்பு.

கதிரைமலை கடுமலையிலுள்ள முத்துமாணிக்க விநாயகப் பெருமான் உத்தரவு பெற்று வருஷா வருஷம் பக்தகோடி அடியார்கள் பொருளுதவியால் நடத்தேறிவருகிற ஷெ தண்ணீர்ப்பந்தல் மேன்மேலும் நடத்தோங்கி வருவதற்குப் பெரும் பொருள் வேண்டும்.

கனதனவான்களாகிய சகல புண்ணியசீலர்களும் தங்கள் தங்களால் இயன்றளவு உதவும் பணம் அனுப்பும் விபரம்:—

யாழ்ப்பாணம் நீவுப்பற்று மணியம் வேலணை ஸ்ரீ மு. சோமசுந்தரம்பிள்ளை அவர்களிடம் அனுப்பவும்.

முத்துமாணிக்க வேல்சாமி சீடனுகிய
சி. வீரவாகுப்பிள்ளை குமாரன்
வீ. ஆ. துரைசுவாமிப் பரதேசியார்,
(Y. 66. 31-12-30,) கதிரமலை.

யாழ்ப்பாணம் ஐக்கியலாபநிதி.

வங்கிக்காரர்

1918-ம் ஆ ஸ்தாபிதமானது — மூலநிதி 8 லட்சம் ரூபா..
இதுவரையிற் கொடுபட்ட பங்குப்பணம் ரூபா 1,64,706
100 ரூபா விகிதமான 8000 பங்குகள்.

பங்குப்பணங் கட்டுமுறை.

பங்கொன்று 1 ரூபா விகிதமாக 75 மாசகாலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்தகாலமுடிவில் பங்கொன்றுக்கு ரூ 100 திருப்பிக்கொடுக்கப்படும். பங்குகள் எந்தநேரமும் வாங்கலாம்.

நினசரிப் பற்றுவரவு.

எச்சமிநி சராசரி 500 ரூபாவிற்குக் குறையாமல இருக்குமானுல் 3 விகித வட்டியுடன் தினசரிப்பற்றுவரவு செய்யலாம்.

தவணைவரையறுக்கப்பட்ட க்ஷேமப்பணம்.

க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 12 மாசம் என்னுங் காலங்கள் வரையறுத்து ஏற்கப்படும். வட்டியும் முறையே 3 விகிதம், 4 விகிதம், 6 விகிதமாகக் கொடுக்கப்படும்

உண்டியல்கள்.

கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும், "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்கவிதமாகக் கொடுக்கப்படும். தொலைவாய்ராச்சியப்பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.
இந்தியநோட்டு வட்டத்திற்கு மாற்றிக்கொடுக்கப்படும்.

கடன்

நகைகள் ஈடுவைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். மாசந்தோறும் கட்டுபவர்களுக்கு 10 விகிதமான வட்டியும் ஏனையோர்க்கு 12 விகிதமான வட்டியும் விதிக்கப்படும். (ஈடுவைத்தவர்கள்) முதலையும் பாகம்பாகமாகக் கொடுக்கலாம்.

காணி, தானியங்கள், சில முதலாம் பழுதுபடாத பொருள்களையும் ஈடாகவைத்துக்கொண்டு தக்க பிணையுடன் கடன் எடுக்கலாம் (இந்தக்கடனையும் பாகம் பாகமாகக் கட்டித் தீர்க்கலாகும்.)

இன்னும் வேண்டிய விபரங்களை மானேசர் மூலமாக அறிந்துகொள்ளலாம்.

(Y. 72. 21-8-30.)

சுகம் சுறுக்காயும் நிச்சயமாயுங் கிடைக்கும்
எவ்வித நோவாயிருந்தாலுஞ்சரி,
தலைவலி
காம்புவலி
இல்வாய்வு
துடைப்பிடிப்பு
வாதம்
சுளுக்கு
தொண்டை நோ
நெஞ்சுச்சளி
எல்லாவற்றிற்கும்

லிட்டில்ஸ் ஓரியென்டல் பாம்
உடன் சுகந்தரும்.

43 வருடகாலமாய் அனுபவத்தில் சிறந்த மருந்து என்று நிச்சயிக்கப்பட்டது. அது தரும் சுகத்தோடு ஒப்பிட்டுப் பார்த்தால் அதின்விலை ஒரு பெரிதல்ல.

மிருகக்கொழுப்புச் சேராதது.

எல்லா ஷாப்புகளிலுங் கிடைக்கும்
(1—28) Little's Oriental Balm and Pharmaceutics Ltd., Madras

(Y. 51 31-12-30)

சாலாமிஸ்திரி லேகியம்.

இந்த லேகியத்தை யான் அநேக பிரபுக்களுக்குச் செய்து கொடுத்துப் பல வியாதிகளைக் குணப்படுத்தியதால் அவர்கள் மனமகிழ்ந்து வெகுமதிகளையும் கொடுத்திருக்கிறார்கள். இதை நான் விளம்பரத்தில் உலகனைமைக்காகப் பிரசுரித்திருக்கிறேன். ஆனல் பிரபுக்கள் மாத்திரமல்ல ஏழைகளும் இதனுலுண்டாகுஞ் சுகத்தை அடையும்படி பொதுஜன நலத்தைக்கருதியே இப்போதுஇந்த லேகியத்தைப்பற்றிப் பிரசுரித்து வருகிறேன்.

இது சாலாமிஸ்திரி, குங்குமப்பூ, லொஜித், கஸ்தூரி, குமாஸ்தாகா, பிதாளு, சாலாமுஸ்லி, சப்பேமுத்ஸ்லி, பிஸ்தாஸ, சார்ப்பருப்பு, பாதம்பருப்பு, சாத்தாவாரி, சீர்முன்னிவிதை, நாகப்பூ வங்கபஸ்பம், அப்ரக்பஸ்பம், பவளப்பஸ்பம், வெள்ளிபஸ்பம், அயகாந்த செந்தூரம் சாம்பிராணிப் பதங்கம் இன்னும் அநேக புஷ்டியான மூலிகைவகைகள் சேர்த்துச் செய்யப் பெற்றிருக்கின்றது.

இதனுல் நீரிழிவு, நீர்க்கடுப்பு, நீரடைப்பு, மூலச்சூடு, இருவருஷத்துள் உண்டாயிருக்கும் பக்கவாய்வு, இருமல், காசம் பித்தகாமாலை, பித்தபாண்டு, பீனிசம், கைகால் வாந்தல், வலி, இடுப்புவலி, பக்கவாய்வு இன்னும் அநேக கடுமையான வியாதிகள் தீரும். ஸ்திரீகள் இந்த லேகியத்தைச் சாப்பிட்டுவந்தால், மேற்சொல்லிய வியாதிகள் சுகமடைவதுடன் ருதுக வாய்வு, பிரசவ அறையில் உண்டாகும் நோய்கள் தீர்ந்து தேகபுஷ்டியும் பலமும் பெறுவார்கள். பால் விருத்தியாகும்.

இந்த லேகியத்தின் விலை ரூத்தல் ஒன்றுக்கு ரூபா ௨௦. அரைரூத்தலுக்கு ரூபா ௧௦. கால் ரூத்தலுக்கு ரூபா ௫. தபாற்செலவு பிரத்தியேகம்.

சிங்கப்பூர் பினங்கு முதலிய தொலைவாயிராச்சியப்பகுதிக்கு வீ. பி. சட்டம் இல்லாததினுல் முன்பணம் ஆடர் அனுப்புதல் வேண்டும்.

இங்ஙனம்,
க. ஆறுமுகம்பிள்ளை,
சிவஞான ஆரோக்கியசுகாதாரவைத்தியசாலை
காத்தான்குடி. போஸ்டு,
மட்டக்களப்பு,
Y 75. 31-12-30.) இலங்கை.

The "New Lanka" Roadster
Chromium Plated Bicycle.

கவனிக்கத்தகுந்த குறிப்புகள்.



1. கைபிடிக்கம்பி குரோமியம் பூசப்பட்டது
2. ஆசனத்தின் வில்லுக்களும் குரோமியம் பூசப்பட்டது.
3 சட்டம் உறுதியாய் இணைத்த உருக்கு.
4. சேறுதாங்கி மிகவும் கனமானது.
5. பிறேக்குகள் திருத்தமான முறையாக உள்ளன.
6. வளையங்களும் குரோமியம் பூசப்பட்டவை.
7. கம்பிகள் கெருப்புக்குஉருகக்கூடாத பனிக்குப்பூச்சுப் பூசப்பட்டவை.
8. சங்கிலி "ஹான்ஸ் றீனேல்ட்" கம்பனியினுடையது.
9. சில்லுக்குடங்கள் மிக்ககனதியான 1¼ இஞ்சு பிரமாணமான குண்டுகளைக் கொண்டவை.
10 சில்லுத்தாங்கி முட்டைவளைவுள்ளதும், குரோமியம் பூசப்பட்டது மாய்த்திருத்தமான முறையாகவும் உள்ளது.

கைவிலைக்கு ரூபா 75.

அல்லது

தவணையிலே முதல் மாசம் 10 ரூபாயும், பின்னர்
10 மாசங்களுக்கு மாசந்தோறும் 7 ரூபா 16 சதமும்.

SUB-AGENTS:-

M A Sinna Lebbe Bros,
Batticaloa.

Jayanoris Silva & Sugathadasa,
Trincomalee.

T. N Lingam
Vannarponnai,
Jaffna

National Drapery Stores,
Anuradhapura

R. M C. de Silva
Main Street,
Ambalangoda

L N de Silva
Matara.

SOLE AGENTS:
Colombo Stores Ltd.
P. O. BOX 197. COLOMBO.

(Y. 74. 19 8 30 to 18 12 30)

வேண்டும்.

காரைநகர் வியாவிற் சைவபரிபாலன வித்தியாசாலைக்குத் தலைமை உபாத்தியாயர் வேண்டும்.

பயிற்றப்பட்ட முதலாந் தாரதரப் பத்திரமுடையவராயிருத்தல் வேண்டும். மதுரைத் தமிழ்ச்சங்கப்பரீக்ஷை அல்லது வேறுவிசேஷ பரீக்ஷையிற் சித்தியடைந்தவராயிருப்பின் பிரமாணத்துக்கு மேலதிகமான சம்பளமுங் கொடுக்கப்படும். உபாத்திமார் தாரதரப் பத்திர ஆரம்ப வகுப்பு நடத்தக்கூடிய திறமையுடையவராயிருத்தல் வேண்டும்.

Mis. 38 18 8-30.

இந்துசாதனம்.

யாழ்ப்பாணம்: பிரமோதூதஹு ஆவணிமீ [illegible] திங்கட்கிழமை.

இலங்கைப் புகைரதப் பகுதி.

2

இலங்கைப் புகைரதப்பகுதி அரசினரால் நிர்வகித்து நடத்தப்படுவதாயிருக்கின்றதெனினும் இந்தியாவில் வியாபார சமுதாயத்தாரால் வைத்து நடாத்தப்படும் புகைரதப்பகுதிக்கு இணையாகமாட்டாது. இந்திய புகைரதத்திற் போக்குவரவு செய்யும் பிரயாணிக்கு அவனது சாதி, சமையம், பழக்க வழக்கம் முதலாம் இவைகட்கு எவ்வகையான இழுக்கும் நேராவண்ணம் அவன் பிரயாணஞ்செய்யக்கூடிய வசதிகளெல்லாம் உண்டென்று சொல்லலாம். இங்கேனிலோ அவைபோன்றுங் கிடையா. இலங்கைப் புகைரதத்தில் மூன்றாம்வகுப்பிற் செல்லும் பிரயாணிகட்கு, பிரயாணத்திற்கு இன்றியமையாதுள்ள தண்ணீர்தானும் அகப்படுதல் அரிதெனலாம். இனி, புகைரத உத்தியோகத்தர்களேன் றிருப்பவர்களுள் "போட்டர்" எனப்படும் கூலிக்காரன் தொடக்கம் புகைரத ஸ்தானாதிகாரி வரையிலுள்ள எவரும் மிக்க அதிகாரத்தோடும் ஆங்காரத்தோடும் இடையிடையே அக்கிரமத்தோடுங் காணப்படுகின்றனர். இன்சொல் இரக்கம் பொறுமை தயவு முதலாகச் சொல்லப்படுங் குணங்கள் இவர்களிடத்திற் குறைவெனலாம். எவரைப்பார்த்தாலும் பொலிஸ் அதிகாரிகளைப் போற் காணப்படுகின்றார்கள். இலங்கைப் புகைரதப்பகுதித் தலைவராகிய மிஸ்ரர் டற்றன் வாரத்திற்கு வாரம் பட்சத்திற்குப் பட்சம் மாசத்திற்கு மாசம் பிரயாணிகளுடன் இதமாய் ஊடாடப் பயிலுங்களென்னுங் கருத்தமைந்த சுற்று நிருபங்களை யனுப்பினாலும், பெற்றார் சொற்களைக் கொச்சைமக்களைப்போல் இக்கீழ் உத்தியோகத்தர்கள் மிஸ்ரர் டற்றனுடையசொல்லைக் கேட்பதில்லை மேலும் இந்திய புகைரதப்பகுதியிற் கடமை பார்க்கும் ஸ்தானாதிகாரி முதலிய உத்தியோகத்தர்கள் பிராமணர்களாகப் பெரும்பாலும் இருத்தலினால் அவர்களிடத்து மதுபானம் இல்லையாகும். இங்குள்ள உத்தியோகத்தர்களை அப்படிச் சொல்லுதல் முடியாது. புகைரதப்பகுதியார் அரசினர் பிரமாணத்தைத் தாங்களே ஒரு விஷயத்தில் மீறி நடக்கின்றார்கள். மாட்டுவண்டி குதிரைவண்டி மோட்டாரதம் முதலாகச் சொல்லப்படும் ஏனைய ரதங்களில் குறித்த தொகைக்கு மேற்பட்ட பிரயாணிகளை ஏற்றிச் செல்வோருக்கு ரூபா 50 வரையில் அபராதமெனப் பிரமாணம் விதிக்கப்பட்டிருக்கிறது. இப்பிரமாணத்தை மீறும் எவனும் குறித்த அபராதத்திற்கு ஆளாவானென்பது நிச்சயம். ஆனால் புகைரதத்தில் மாத்திரம் 32 எனப் பிரயாணிகள்தொகை குறிக்கப்பட்ட பெட்டியில் 64 பேர் சிற்சில சமையங்களிற் பிரயாணஞ்செய்யக் காணலாகும். இடமில்லையெனக் கண்டால் புகைரதப்போட்டர்மாரும் காவலரும் சனங்களைப் பிடித்துப் பெட்டிக்குள் திணித்துவிட்டு, அவர்கள் கொட்டுண்டு போகாமல் கதவைச் சத்தத்தோடு இறுக்கிப் பூட்டிவிடுவார்கள். இவைகளெல்லாம் பிரயாணிகட்கு வெறுப்பான செயலாகும். அல்லாமலும் பிரயாணிகள் அயிரோப்பியர் ஏனையோர் என்ற பேதம் பாராட்டாமல் விடப்படுவதுமில்லை. பிரயாணிகளை அலட்சியஞ்செய்யு மியல்பும் இங்கே காணப்படுகின்றது. சென்றவாரம் நுகக்கோடையிலிருந்து சென்ற ஒரு பிரயாணி, புகைரதப்பெட்டியின் கதவு காத்திராப்பிரகாரந் திறக்கப்பட, எற்றுண்டு வெளியே விழுந்து மோசமான நிலையிற் கிடக்க அந்தப் புகைரதத்தொடர் வீழ்ந்த பிரயாணியையிட்டுச் சிறிதும் பொருட்படுத்தாது மிக்க வேகமாய்ச் சென்று தான் அடையவேண்டிய ஸ்தானத்தை யடைந்துவிட்டதெனப் புதினப்பத்திரிகைகளில் வெளியிடப்பட்டிருந்தது. இது உண்மையாகவிருந்தால், உண்மையென்றே யறிகின்றோம்— இப்படியான வன்கண்மையோடு கூடிய புகைரதத்தில் எவராயினும் ஏறிப் பிரயாணஞ்செய்ய உடன்படுவாரா? அரசினராலல்ல, தெய்வத்தால் நடத்தப்படும் புகைரதமாயிருந்தாலும் பிரயாணிகள் தங்கள் வசதிகளைப்பார்த்து ஏறுவார்களேயல்லாமல் நடத்துபவருடைய மகத்துவத்தை உத்தேசித்து அந்தப்புகைரதத்தைக் கைக்கொள்ளுபவரல்லரென்பதை இலங்கைப் புகைரதப்பகுதியார் எப்பொழுதும் மனசில் வைத்துக்கொள்ளவேண்டும்.

இனி, புகைரதப்பிரயாணிகள் கொண்டுபோகும் பொருள்பண்டங்கள், புகைரத மார்க்கமாக அநுப்பப்படும் பொருள்கள் இடையூறில்லாமல் சாவதானமாகக் கொண்டுபோகப்படுகின்றனவோவென்றால் அதுவுமில்லையாம். சீனச்சட்டியெனப்படும் காரிகும்பிற் செய்யப்பட்ட யந்திரம் முதலியவைகளின் பாகங்கள் புகைரதவாயிலாக அநுப்பப்படும்போது உடைந்தும் சேதமுற்றும் போகின்றனவென்று வியாபாரிமார் மிஸ்ரர் டற்றனுக்கு முறையிட, மிஸ்ரர் டற்றன் அவைகளைச் சாவதானமாக ஏற்றுமதி யிறக்குமதி செய்யவேண்டுமென்று தமது புகைரதப்பிள்ளைகட்குச் சிலதினங்களுக்குமுன் கட்டளை விடுத்திருக்கின்றார்.

இவைமாத்திரமா, பிரயாணிகள் புகைரதக் காவலர் பொறுப்பில் ஒப்பித்துவிட்ட பெட்டிகளுள் வைக்கப்பட்டிருந்த ஆடையாபரணங்கள் பின்பு காணப்படவில்லையென்று சில பிரயாணிகள் முறையிட்டதைப் பத்திரிகைவாயிலாக எவரும் அறிந்திருக்கின்றனரல்லவா? இதுமட்டோ, சில மாசங்கட்குமுன் மட்டக்களப்புப் புகைரதப்பகுதியில் புகைரத உத்தியோகத்தர் ஒருவருடைய பணத்தை 'வேலி பயிரை மேய்ந்தவிதமாக' இன்னொரு புகைரத உத்தியோகத்தர் திருடினரென வியாச்சியம் நடக்கின்றதே. இப்படியான செயல்கள் பிரயாணிகள் புகைரதத்தை வெறுக்கச் செய்வனவா விரும்பச்செய்வனவா? புகைரதத்தைப் பிரயாணிகள் வெறுப்பதற்கு, நாம் மேலே எடுத்துக்காட்டிய அக்கிரமங்களெல்லாம் பிரதான ஏதுக்களாகும்.

மநு தர்ம சாஸ்திரம்.

முதல் அத்தியாயம்.

[வண்ணை: வை. இ.]

(11-8-30 இந்துசாதனத் தொடர்ச்சி.)

தருமலக்ஷணம்.

சுவர்க்கமுதலிய ஒருபலத்தை விரும்பி தவமுதலிய அறத்தைச் செய்தல் யாவருக்கும் நன்றன்று. ஆனால் அது விரும்பாமை இவ்வுலகத்திலரிது வேதமோதுதலும் எக்கியஞ் செய்தலும் காமியமாகவே யிருக்கின்றது இந்தச் செய்கையினாலே இந்தப் பயன் அடையப்படுகிறது. என்று சொல்வது சங்கற்பம். அதனாலே இச்சை யுண்டாகிறது. அதனாலே எக்கியங்களையும், விரதங்களையும், நியமங்களையும் ஒழுக்கங்களையுஞ் செய்கிறார்கள்.

இச்சையையீக்கினவனுக்கு எந்தநாளிலும் உலகத்திலே எப்பொழுதும் எவ்விதச் செய்கையும் கூறப்பட்டிருப்பதாகக் காணப்படவில்லை கொஞ்சமாவது எந்தச் செய்கையைச் செய்கிறானோ அது முழுதும் பெறுபேற்றை விரும்பிய செய்கையேயாம்

எக்கியாதி கருமங்களைப் பலத்தை விரும்பாமற் செய்கிறவன் மோக்ஷத்தையடைகின்றான். இம்மையிலுந் தானினைத்தபடி சர்வாபீஷ்டங்களையும் அடைகிறான்.

இருக்கு முதலிய நான்கு வேதங்களும் இந்த வேதமறிந்த இருடிகளின் ஸ்மிருதியும், அவர்களின் அநுஷ்டானமும், சாதுக்களின் ஒழுக்கமும், தன்மனதின் சந்தோஷமும் தருமத்துக்குங் காரணமாகவிருக்கின்றன.

மநுப்பிரஜாதிபதியில் எந்தவருணத்தாருக்கு எந்தத் தருமம் விதிக்கப்பட்டதோ அதுமுழுதும் வேதத்திற் சொல்லப்பட்டிருக்கின்றது. அவர் எல்லாவேதத்தின்பொருளையும் நல்லாயறிந்தவரல்லவா?

தெரிந்தவன் இந்தச் சாஸ்திரத்தை ஞானக்கண்ணினாலறிந்து இதிற் சொல்லியிருக்கும் தருமங்கள் வேதத்தினாற் சொல்லப்பட்டதாகவே யெண்ணி தன் தருமத்தை நடத்தக்கடன்.

சுருதியிலும் ஸ்மிருதியிலும் சொல்லப்பட்ட தருமத்தை யநுஷ்டிக்கிறவன் இவ்வுலகத்திற் கீர்த்தியை யடைகின்றான். இறந்தபின் ஒப்பில்லாதிருக்கும் சுவர்க்கத்தையடைகின்றான்.

வேதத்தைச் சுருதியென்றும், தருமசாஸ்திரத்தை ஸ்மிருதியென்றும் அறியவேண்டும். அவ்விரண்டையும் விரோதமான தர்க்கசாஸ்திர யுக்தியைக்கொண்டு ஆட்சேபிக்கக்கூடாது. ஏனெனில் அவற்றினாலே தருமம் விளங்குகின்றது.

தருமத்திற்குக்காரணமான அவ்விரண்டையும் எவன் தர்க்கசாஸ்திர யுக்தியினால் அவமதிக்கின்றானோ அவன் பெரியோர்களால் கர்மாநுஷ்டானத்தினின்றும் நீக்கத்தக்கவன். வேதத்தை நிந்திப்பதால் தெய்வமில்லையென்று சொல்லுபவனும் அவன் ஆவன்.

வேதம், ஸ்மிருதி, பெரியோர்களநுஷ்டானம், தன்மனதின சந்தோஷம் ஆகிய இந்த நான்கையும் தர்மத்திற்கு அடையாளமாகக் கூறுவர்.

பொருள், காமம் இவைகளில் சம்பந்தப்படாதவர்களுக்கு தருமத்தினுபதேசமே விதிக்கப்படுகின்றது. தருமத்தை யறிய மன முன்னவர்களுக்கு வேதமே முக்கியப்பிரமாணமாகும். (தொடரும்).

ஆப்தர் வாக்கியங்கள்.

மஹாத்மாகாந்தி வெளியிட்டவை.

(சோமவாரப் பிரசுரத்தின் தொடர்ச்சி.)

அன்பே நமது வாழ்க்கைக்குரிய பிரமாணமாகும். அன்பிலையாயின நாங்கள் கீழான நிலையையடைவோம். அன்பைக் கைக்கொள்வோமாயில் நாங்கள் பழைய மேலான நிலைமையையடைவோம்.

ஃ ஃ ஃ

பாரதமக்கள் தங்கள் சமையத்தில் அன்புடைமையையுஞ்சேர்த்துக்கொண்டு அரசியல் விவகாரங்களில் இறங்குவாரேயானால், சுயராச்சியம் எங்களுக்கு மேலுலகத்திலிருந்து வருவதுபோல வரும்.

ஃ ஃ ஃ

பெரும்பான்மையும் அன்பும் இரக்கமுமே, ஆயுதங்களைக்காட்டிலும் வலிமையுடையனவாகக் காணப்படுகின்றன. ஆயுதயுத்தங்களினாலே, யுத்தம் முடிந்த பின்னரும் பலசேதம் உண்டு. ஆனால் அன்பு யுத்தத்தில் எவ்வகையான சேதமும் நிகழமாட்டாது. அல்லாமலும் அன்பின் சக்தி ஆத்மசக்தியென்னுமிவைகளோடு ஒத்துப்பார்க்கும்போது படைவலி எதனையுஞ் செய்யமாட்டாதெனலாம்.

ஃ ஃ ஃ

அன்பின் சக்திக்கும் ஆத்மசக்தி, சத்தியம் என்னுமிவைகட்குமிடையே எவ்வகையான்பேதமுமில்லை. இது நாம் அநுபவத்திற்கண்டது. அந்த ஆத்மசக்தியில்லாவிட்டால் இந்தப்பிரபஞ்சமயக்கமின்றி மறைந்துவிடும்.

ஃ ஃ ஃ

சாத்விக எதிர்ப்பு தத்தம் உடம்பைப் பொறுத்துப்பொறுமையினால் சுதந்திரங்களைப் பெறுதலாகும். இது ஆயுதயுத்தத்திற்கு நேர்மாறானது. எனமனச் சாட்சிக்குமாறான ஒருகருமத்தைச்செய்ய வேண்டி நேர்ந்தால் நான் ஆத்மசக்தியை தலைகொள்ளச் செய்வேன்.

ஃ ஃ ஃ

நான் பிரமாணத்திற்குக் கீழ்ப்படியாமல் அதனால் வரும் தண்டனையையும் அடையாமலிருக்கும் பட்சத்தில் ஆத்மசக்தியைக் கிளரச் செய்கிறேன்.

ஃ ஃ ஃ

எங்கள் மனச்சாட்சிக்குமாறானதை அச்சத்தினாற் செய்வது மனுஷ இயல்புக்கு விரோதமானது. அது சமயத்திற்கும் மாறானது. அதனைத்தான் அடிமைத்திறமென்று சொல்வது.

"கல்வி விஷயமாக இந்துக்களின் கொள்கை"

[வடமாராட்சி இந்து வித்தியாசங்கத்தாரின் கேள்விப்படி நீதியரசர் மிஸ்ரர் அக்பார் பருத்தித்துறையிற் செய்த பிரசங்கத்தின் மொழிபெயர்ப்பு.]

(முற்றொடர்.)

எனது குரு அராபியாவைச் சேர்ந்தவர்; அவர் எனக்கு ஒரு கதை சொல்லியிருக்கிறார்; மதினாவில் மகமந்துடையசமாதிக்குச்சமீபமாக, தாம் தியானத்திலிருந்தபோது தமக்கு ஞானத்திற் சில தோற்றப்பட்டதாம்; தமது தலைக்கு மேலாக ஆகாயத்தில் மூன்று புறாக்கள் பறந்து செல்லக் காணப்பட்டனவெனவும், இவைகள் ஒன்றைபொன்று தொடர்ந்து சென்றனவென்றும், இவைகளைப்பற்றித் தாம் சிந்தித்துக்கொண்டிருக்கும்போது மகமத் தமக்குத் தோற்றப்பட்டாரென்றும், அந்தப் புறாக்களின் தோற்றத்தையும் அர்த்தத்தையும் தமக்கு விளக்கப்படுத்தினாரென்றுஞ் சொன்னார். மூன்று புறாக்களுள் முந்திச் செல்லும் புறா ஆன்மார்த்தவிஷயமாக உழைக்கும் ஒருவனை ஒத்ததென்றும், நடுவிற் சென்ற புறா பிரபஞ்சவாழ்க்கையினியல்பை விளக்கியதென்றும், ஈற்றிற் பறந்த புறா பிரபஞ்சவாழ்க்கையைத் தேடிச் செல்பவனையொத்ததென்றும் தமக்கு மகமத் போதித்ததாக எமது குரு எனக்குச் சொன்னார். கடவுளிடத்தில் தனது சிந்தையை வைத்தவனுடைய காலடியில் உலகம் முழுவதுங் கிடக்கும். உலகம் முழுவதும் என்னை ஏற்றுக்கொள், என்னை ஏற்றுக்கொள் என்று சொல்லிக்கொண்டு அவனைத் தேடிச்செல்லும். ஆனால் இந்த இரகசியங்களை மேலைத்தேசவாசிகள் இன்னமும் உணர்ந்தாரல்லர். ருசியாவிலே கடவுளைப்போல் பொம்மைகளைச்செய்து அவற்றைப் பின் எரிக்கிறார்கள். கடவுளைப் பற்றி அவர்கள் கொண்டுள்ள கொள்கை விபரீதமானது.

கடவுள் நூதனமானவர்; அவரே சலனமில்லாதவர்; அவரே எல்லாவற்றையும் இயக்குபவர்; நான் உங்களுக்கு இங்கே சொல்வதும் நீங்கள் இவற்றைக் கேட்பதும் நமது நண்பரொருவர் இடையிற் குழப்புவதும் எல்லாம் அந்த இறைவன் இயற்றுவனவேயாம். இந்த உலகத்தை ஒரு கொடிப்பொழுதில் 25 மைல் விகிதம் இயங்கச்செய்பவரும் அவரே. இங்ஙனமெல்லாமிருக்குமானால் அந்தச் சர்வவல்லமையுள்ள கடவுளோடு எங்களை ஒத்துப் பார்க்கும்போது நாங்களெல்லாம் எம்மாத்திரம்? எங்க மார்க்கமும் உங்கள் மார்க்கமும் அந்தப் பர பொருளைத் தேடிச்செல்வதற்கான ஒரு மார்க்கந்தான்; இந்த உண்மையை அறிந்திருப்பது தான் மேலான கல்வி; இவைகளெல்லாம் பள்ளிக்கூடங்களிற் பயிற்றப்படுவனவா? இவ்வுலகத்தில் ஒவ்வொருவனும் தனது காணி பூமி பொருள் பண்டம் முதலாம் பிரபஞ்சவிசாரங்களில் மூழ்கிக்கிடக்கின்றான். என் இப்படி? இறக்கும்போது உங்களுடைய பொருள்பண்டங்களும் காணிபூமிகளும் உடன் வருமா? இந்தப் பொருள்பண்டம் நிலம்புலம் உங்களுக்கு மரணவத்தையில் ஏதும் பயன்படுமா? இந்த விஷயமாக எனது பாட்டனார் எனக்குச் சொன்ன ஒரு கதையை இப்பொழுது உங்களுக்கு நான் சொல்ல விரும்புகிறேன்.

[இந்தச் சந்தர்ப்பத்தில் மேசையிலிருந்த ஒரு நீர் நிறைந்த பனிக்குப்பாத்திரம் தட்டுண்டு நீர் வழற்றுண்டு மேசையிற் பரந்து செல்லக் கண்ட மிஸ்டர் அக்பார் "இதுவும் நல்ல சகுனந்தான்" என்று சொல்லித் தான் சொல்லத் தொடங்கிய கதையைச் சொல்லலாயினார்].

"மலாய்காட்டிலே ஒரு யாசகன் இருந்தான். ஒருநாள் யாரோ ஒருவர் அந்த யாசகனுக்கு நல்ல ஒரு ஆம்பர்ச்சுங்கானைக் கொடுத்தனர். அவனுக்கு அந்தச் சுங்கானிற் பிடித்துக்கொண்டது. இந்தச் சுங்கானொன்றுதான் அவனிடத்திலுள்ள பொருள். சிலகாலஞ்செல்ல அவனுக்கு அந்தியகாலம் நேர்ந்தது. ஆனால் மூன்று நாளாக அவன் பிராணன் நீங்கவில்லை; இதற்குக் காரணமென்னவென்பது வைத்தியர்களொருவருக்கும் புலப்படவில்லை; அவனுக்குப் பக்கத்தே நின்ற ஒரு அநுபவஸ்தர் "இந்தக் கிழவனுக்கு ஏதோ பெருந் தொடர்பு இங்கே யிருக்கிறதுபோலும், ஆனபடியாற்றான் பிராணன் போகவில்லை" என்று சொன்னார். மற்றையோர் குடிசையைத் தேடிப் பார்த்தவிடத்து அந்த ஆம்பர்ச்சுங்கானைக் கண்டு எடுத்துவந்தார்கள். கிட்டக் கொண்டுவந்தவுடனே கிழவன் சுங்கானை ஆர்வத்தோடு பார்த்தான். நின்றோர் கிழவன் நெஞ்சில் மெல்லச் சுங்கானை வைத்தார்கள். அப்பொழுதும் பிராணன் பிரியவில்லை. பின்னர் அந்த ஆம்பர்ச்சுங்கானை உரைத்து உரைத்த நீரைக் கிழவனுடைய வாயில் வார்த்தார்கள்; என்ன ஆச்சரியம்! உடனே பிராணன் நீங்கிவிட்டது". உங்களுள்ளும் நிலம் புலம் பொருள் பண்டம் என்று கட்டிக்காத்திருப்பவர்களுடைய பாடு அந்தியகாலத்தில் இப்படித்தான் முடியும். இப்பொழுதே நீங்கள் மறுமையைப்பற்றிச் சிந்தியாதொழிவீரேல் அந்த மேலான மறுமைச் சுகத்தை யடைதல் அசாத்தியம். ஆங்காலமெல்லாம் ஆன்மசுகத்தை யலட்சியஞ்செய்துவிட்டுச் சாங்காலம் அதனை வா, வா, என்றால் அது வரப்போவதில்லை. பின்பு பச்சாத்தாபப் படவேண்டித்தான் நேரும்.

அதிக நிலம்புலமும் அதிகபொருள்பண்டமுமுடையவர்களாகிய செல்வர்கள் என்னசெய்யவேண்டும். தருமமென்றாற்போல் எல்லாந் தருமந்தானேயென்று நினைத்துப் பொருளைச் செலவிடப்படாது. நாட்டியப்பெண்களுக்கும் வேறு வீண் கருமங்களுக்கும் உங்கள் பொருளைச் செலவிடவொண்ணாது. சிருஷ்டிகர்த்தா விஷயத்திற் பேய்த்தனம்பண்ணவொண்ணாது. அவரே நிர்மலர்; பரிசுத்தமானவர்கள்தான் அவரை யடைதல் முடியும். அவரே ஞானசோதியாய் விளங்குபவர். நீங்கள் அந்த ஞானத்திற் சிறிதடைய விரும்புதல்வேண்டும். ஆதலால் ஞானத்தைப் பெறுதற் கேதுவான வித்தியாசாலைத் தருமத்தினபொருட்டுப் பொருள் உதவுங்கள். யோகர்சாமிபோன்ற ஒரு மகானை உங்கள் வித்தியாசாலையிலிருந்து தோற்றுவிக்க முடியுமா? முடியுமானால் அதிலும்பார்க்க மேலானகாரியமென்ன விருக்கின்றது. (வரும்)

நூல்களைப்பற்றிய குறிப்பு.

மானிப்பாய் மருதடி விநாயகர் திருஊஞ்சல் இது மானிப்பாய் இந்துக்கல்லூரி ஆசிரியர் ஸ்ரீ தா. சுவாமிநாதன் அவர்களாலியற்றப்பெற்று மேற்படி கல்லூரிச் சமய சங்கத்தாரால் அச்சிற் பதிப்பிக்கப்பட்டது. இது வழக்கம்போல 10 கவிகளையும், வாழி, எச்சரிக்கை, பராக்கு மங்களம் என்பனவற்றையும் கொண்டுள்ளது. இதிற் சொற்சுவை பொருட்சுவை ததும்பும் திருப்போரூர் சந்நிதிமுறை முதலிய அருட்கவிகளின் கருத்துக்களை யமைந்த இனியபாக்கள் உள்ளன எமக்கனுப்பிய பிரதிக்காக நன்றி கூறுகின்றோம்.

நல்லூர்
சம்ஸ்கிருதவித்தியாசாலை.

திருவளர் நல்லூர்த்திவ்வியஸ்தலத்திலே மேற்கூறப்பட்ட நாமத்தைக்கொண்டதாக ஒரு வித்தியாசாலை நடந்துவருகின்றது. இதை நடத்திவிப்பவர் தம்பையாக்குருக்களெனச் சாதாரணமாக அறியப்படுபவராகும ப்ரமஸ்ரீ கார்த்திகேயக்குருக்களேயாவர். இவ்வித்தியாசாலையைப்பற்றிய விளம்பரம் ஒன்று எமதுபத்திரிகையிற் பிறிதோரிடத்திற் பிரசுரம் பெறுகின்றது அதில் இவ்வித்தியாசாலையிலே சேர்ந்துகொள்ளும் மாணுக்கர்கள் அநுசரிக்கவேண்டிய நிபந்தனைகள் விளக்கப்பட்டிருக்கின்றன.

சைவசமயத்தார்க்கும் எமது சமய நூல்களும் மற்றும் பொருள்நூல்களும் இன்னும் இலக்கிய காவியங்களும் சம்ஸ்கிருதபாஷையிலேயே பாக் கிடக்கின்றன. ஆனால் சமஸ்கிருதப் பாஷையோ இப்போது பேசப்படும் பாஷையாக இல்லாமையினாலேயும், உத்தியோக முயற்சிகட்கு வேண்டப்படும் பாஷையாகவும் இல்லாமையினாலும் அது அநேகரால் கற்கப்படுவதொன்றாகவிருக்கவில்லை, இதனால் அதன் மலிந்து கிடக்கும் அறிவுநூல்கள்யாவும் சைவசமயத்தாருக்குச் சிறப்பாகவும் கிட்டாதொழிவதாயின. இவ்வாறு காலஞ்செல்லச் செல்ல அவ்வறிவு நூல்கள் மறைந்து படுவனவாகுமென்பதும் உண்மையே. இவைகளையெல்லாம் நன்கு உணர்ந்து போதும் போறிஞராகும் நமது குருக்களவர்கள் இநதியாவிலிருந்து தமது சொந்தச்செலவில் ஒரு கனபாடிகளை வரவழைத்து மாணவர்கட்கு அன்னவஸ்திர முதலியவும் உதவி நூல்களைப் படிப்பிக்கும் நோக்கங்கொண்டனர். குருக்களவர்களின் இப்பெருந்தானத்தை நாம் மெச்சியும், இந்த முயற்சி நன்முயற்சியாகுமாறு ஆசிகூறியும நாம் மகிழ்கின்றேம்.

குமரேச சதகம். அச.

தாழ்தற் பெருமை.

வேங்கைகள் பதுங்குதலு மாழகிலோதுங்குத [லும்
விரிசிலை குனிந் திடுதலும்
மேடம தகன்றிடலும் யானைக ளொடுங்குத [லும்
வெள்விடைக டுள்ளி விழுலும்
மூங்கில்கள் வணங்குதலு மேலவ ரிணங்குதலு
முனிவர்க ணயந்து கொளலும்
முத்ர்படையோதுங்குதலும் வினைஞர்களட [ங்குதலு
முதலினர் பயந் திடுதலும்
ஆங்காவு சாய்ந்தலு மகிழ்மல நுலர்ந்திடலு
மாயர்குழல் சூடு படலு
மம்புவியி லிவைகாரி யங்களுக் கல்லமா
லதனு லினைப்பு வருமோ
மாங்கனிக் காவரனை வலம்து புரிந்துவளர்
மதகரிக் கிளைய முருகா
மயிலேறி விளையாடு குகனேல்பு வயனிடு
மலைமேவு குமரேச னே

இ-ள்: புலிகள் பதுங்குவதும், மழை முகில்கள் ஒருபுறத்து ஒதுங்குவதும் ஆட்டுக்கடாபின் வாங்கிச் செல்லுதலும், யானைகள் ஒடுங்கிச் செல்வதும், வெண்ணிறமுடைய எருதுகள் துள்ளிவிழுதலும், மூங்கில்கள் வளைதலும, பெரியோர்கள் உடன்படுதலும், முனிவர்கள் விருப்பங்கொள்ளுவதும், வலிய சேனைகள் பின்னடைந்து விலகிச் செல்வதும, காரியகாரர் அடங்கியிருத்தலும், மூலதன மதிகமுள்ள வணிகர் யோசித்துக்கொண்டிருப்பதும், பாம்பு படஞ்சாய்ப்பதும், மகிழம்பூமலர்ந்துபோதலும், இடையர்களுடையபுல்லாங்குழல் சுடுகோட்டப்படுவதும் ஆகிய இவைகள் உலகத்திலே நிகழ்வது நற்பயனைக் குறித்தல்லாமல் இளைப்படைந்து என்று சொல்லலாகுமோ, மாங்கனியைப்பெறவிரும்பி (உலகம் முழுவதையும் பிரதக்ஷிணம் வருதற்குப்பதிலாக) ப் பரமசிவனைப் பிரதக்ஷிணஞ்செய்த யானைமுகத்தினையுடைய பிள்ளையாருக்குத் தம்பியாகிய முருகக்கடவுளே, மயிலேறி விளையாடு குகனே புல்வயலிடு மலைமேவு குமரேசனே.

காலநிலை

சென்ற வெள்ளி சனிக்கிழமைகளில் யிடையிடையே மழை தூறியது இப்பொழுது மழைக்கோலம் காணப்படுகிறது. இராக்காலத்திற் குளிரோடுகூடிய கடுங்காற்று வீசுகிறது. சென்ற சித்திரை மாசத்திற் பெய்த பெருமழைக்குப்பின் இங்கே மழைபெய்யாமையால் எவரும் மழையை எதிர்பார்த்தவண்ணமிருக்கின்றார்கள். தடிமலெனப்படும் ஜலதோஷம் மூன்றுநாட்சுரம் இடையிடையே பாவியிருக்கின்றன.

டக்டர் போல் உத்தியோகத்தை விடுவாராம்.

கொழும்பு வடக்குப்பகுதி பிரதிநிதியாக வரும நோக்கத்துடன் இப் பிரபலச் சத்திர வைத்தியராகும் யாழ்ப்பாணத் தமிழ்ப் பிரபு தமது உத்தியோகத்தை விட்டு விலகப் போகின்றனராம.

யாழ்ப்பாணக் கடலணைப் பாதைகள்

இற்றைக்குச் சின்னாட்களின்முன் அராலித்துறையிலிருந்து சரவணைக்கும் அல்லது பண்ணையிலிருந்து மற்றப்பக்கத்துக்கு அல்லது வேலணையிலிருந்து புங்குடுதீவுக்கு அல்லது யாழ்ப்பாணத்திலிருந்து பூநகரிக்குக் கடலணைப்பாதை போடுவது என்பதைப்பற்றிப் பெருஞ்சொற் சமாடிகின்றனர் எம்மூரவர். இப்போது எதுக்கும் பணமில்லையென ஓர் வைதாரிவாலிபனைப்போல் அரசாட்சியார் கூறிவிட்டனர். அப்படியல்லவென்று பணம் ஏதும் கிட்டுமேல் அராலி அணைதான் கட்டப்படும்போலக் கோலங்காணப்படுகின்றது.

இலங்கை நியாயவாதி கோலாலம்பூரில்

இலங்கையிலே நியாவதியாக கடமைபார்த்து வந்தாராகும் ஸ்ரீ R. M. இராமலிங்கம், கோலாலம்பூரிலே நியாயவாதியாகக் கடமை பார்க்கும்படி உத்தரவு பெற்றிருக்கின்றனரென 26-7-30ல் 'மலாய் மெயில்' பத்திரிகை கூறுகின்றது.

மலையாளிகட்கு அடி.

இலங்கையிலே மலையாளிகள் அதிகமாக வந்துகூடி பல துறைகளிலும் தொழில் செய்து வருவதினுற் தம் ஊதியத்திற்கு இடைஞ்சலாயிருக்கின்றனரென்று நினைத்து இலங்கைச் சிங்களர் மலையாளிகளுக்கு நியாயமின்றி அடிக்கின்றார்களாம், கொழும்பிலே இவ்விதமான குற்றம் சுமத்தப்பட்ட ஒரு விசாரணை ஆகஸ்ட்மீ 13உ தவணையிடப்பட்டிருக்கிறது.

சிங்ககளச் சிறுமியும் சின்னத்தம்பியும்.

சென்ற சனிக்கிழமை அநுராசபுரஸ்தானத்தலைவர் மதவாச்சியிலிருந்து ஒருதந்தியைப் பெற்றார். அதில் ஒரு சோடி மாப்பிள்ளை பெண்பிள்ளை ஓடிவிட்டார்களென்றும் அவர்களைப்பற்றி நன்கு புகையிரதத்திற் தேடிப் பார்க்கும்படியாகவும் கூறியிருந்தது உடனே ஸ்தானத்தலைவர் பொலிசாருக்கறிவிக்க பொலிசார் பொலிஸ் அப்புஹாமியை அவ்வேலைக்கனுப்பினர். புகையிரதம் ஸ்தானத்தையடைந்தவுடன் அப்புஹாமி புகையிரதப்பெட்டியைக் கிட்டிப் பார்க்கையில் ஒரு பெண்ணும் ஆணுக்கும் பதிலாக இரு ஆண்களிருக்கக் கண்டனர் இருந்தாலும் அப்புஹாமி கொஞ்சம் சந்தேகமடைந்து இருவரையும் ஸ்தானச் சாலையுள் அழைத்துச் சென்று நெருங்கி விசாரிக்கையில் ஒருவர் சின்னத்தம்பியாகவும் மற்றவர் விக்ரோறியாடேவிட் என்னும் சிறுமியாகவும் காணப்பட்டனர்.

மகௌதாரியம்.

பெரியஎண்ணெய்வியாபாரியாகும்மிஸ்டர்: எட்வாட் ஹாச்னெஸ் என்னும் ஓர் அமெரிக்க தனபதி பிருத்தானியாவிலே சனசமூகத்தையும் கல்விவிஷயத்தையும் முன்னேற்றுவதற்கான வழி வகைகளுக்கோர்நிதியாக, 20,00,000 தங்கப்பவுண்கள் உபகரித்திருக்கின்றனர்.

இந்திய சனமஹா சபையின் தலைமை.

வல்லபப்படேல் அவர்கள் மௌலான அப்துல் காலமலர்களைத் தமக்குப்பின் மேற்படி தலைமையை வகிக்கும்படி பேரிட்டிருக்கின்றனர்.

பண்டித மாளவையாவின் அபராதப் பணம்.

சட்டவிரோதமான கூட்டத்திற் கலந்தாரெனக் குற்றஞ் சாட்டப்பட்ட இந்த இந்திய மந்திரத்தலைவருக்கு நீதிபதி ரூ 100 அபராதம் விதித்து விட்டனர் ஆனால் மாளவையா அவர்கள் இப்பணத்தைக் கட்டவில்லை. அன்றியும் அவருடைய புத்திரன் நியாய ஸ்தலத்திற் தோன்றி, யாராவது தமக்காகக் குற்றப்பணத்தைக் கொடுப்பது தமக்குப் பிரியமில்லையென்றும் அப்படி யாராவது கொடுப்பினும் அதை ஏற்பது அரசாட்சியாருக்கு முறையற்ற செயலாகத் தாம் கருதுவதாயும் மாளவையா அபிப்பிராயப்படுகின்றனரென்று கூறினர் நீதிபதி பணத்தை ஏற்பதும் விடுவதும் தமதபிப்பிராயத்தைப் பொறுத்ததாகும் என்றும், மாளவையா சிறைக்கோட்டம் புகுவது தமக்குப்பெருந் துன்பமான காரியமாகுமென்றும், கூறினர். இதற்கிடையில் இன்னாரென்று தெரியாத விதமாக யாரோ ஒருவர் அந்த அபராதப்பணம் ரூ 100 ஐயும் கோட்டில் கட்டிவிட்டனர் உடனே மாளவையா விடுதலை பண்ணப்பட்டார். விடுதலையடைந்த இந்த இந்திய மந்திரத் தலைவர் உடனே பம்பாய் முற்றவெளியிலே நடந்து கொண்டிருந்த சனமஹா சபையின் பகிரங்கக் கூட்டமொன்றுக்குச் சென்றனர். பண்டிதரைக் கண்டது ஆங்குக் கூடியிருந்த பல்லாயிரஞ் சனங்களும் கடல் மடை திறந்தாற்போல் ஒலியெழுப்பி ஆரவாரஞ் செய்தனராம்.

கடிதோத்தரம்,

வா ஆறுமுகம் கல்லுவெட்டித்துறை மஹாத்மாவின் விடுதலை நடந்தபின்பே சரியாகவிருக்தாற் கடிதம் பிரசுரம்பெறும் சுருக்கமாகவும் தெளிவாகவும் எழுதுக

N S சர்மா யாழ்ப்பாணம் ஆ கொளசநிபிலையைப்பற்றிய விஷயத்தை ப்ரம்ம ஸ்ரீ R. S. இரகுநாத ஐயருக்கே யெழுதுக.

சுன்னாகம் பிராசீன தர்ம பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் ஆண்டு நிறைவுவிழா.

[யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி சமஸ்கிருத பண்டிதராகிய பிரமஸ்ரீ N. நாராயணசாஸ்திரியார் B.A., B.L., L.T. செய்தபிரசாரணம்.]

வடமொழியும் தென்றமிழும்.

(முற்றொடர்).

சமயம் ஒன்றே.

என்றாலும், சமயம் ஒன்றே. எல்லோருடைய சமயமும் இந்துசமயமே. இதற்குப் பெயர் சனாதனதர்மம்; அதாவது, முதல்முடிவில்லாச் சமயம். எவ்வாறு நமது கடவுள் அநாத்யனந்தராய், துவக்கமும்முடிவும்இல்லாதவராய் இருக்கிறாரோ, அவ்வாறே நமது சமயமும் இருக்கிறது. இதன் கிளைகள் பற்பல விருப்பினும் எல்லாக்கிளைகளும் எல்லாக்காலங்களிலும் பனிவரை முதல் குமரிக்கரை வரை எங்கும் பரவியிருந்தன, இருக்கின்றன.

பிரமாணம் இருக்குமுதலியவேதங்கள்.

எக்கிளையைச் சேர்ந்தவராயினும் இந்துசமயிகள் யாவர்க்கும் சதுர்வேதங்கள்—நான்மறைகளே—முக்கியப் பிரமாணம்.

தமிழ் நான்மறைகள் உண்டா?

நான்மறைகள் யாவை? சங்கப்புலவர் முதல் சமயகுரவர் சந்தானகுரவர் உட்பட, நம்போலிகள் இறுதியாக, நான்மறைகள் என்றால் ருக், யஜுஸ், ஸாம, அதர்வங்கள் என்ற வடமொழி வேதங்களென்றே எண்ணியிருக்கிறோம். இதற்காதாரம் நான் பின்னுல் விரிவாகச் சொல்லுகிறேன். நாமும் நமது முன்னோரும் இப்படி எண்ணியிருக்க, நான் முன்சொன்ன இருதிறத்தாரில் இரண்டாவதானவர் முன்னொரு காலத்தில் தமிழ்மறைகள் என்று தனியாக வேறு சிலவை இருந்தனவென்று சொல்லுகிறார்கள். அவையெங்கேயென்றால், பஃறுளியாற்றுவெள்ளத்தில் அடிபட்டுப்போயினவென்கிறார்கள். வேதம் நித்தியமல்லவா? வேதம் வெள்ளத்தில் அடிபட்டுப்போகுமா? போனாலும், அது சரியானதாயிருந்தால், கடவுள் அதைக்கரையேற்றமாட்டாரா? அப்படிக் கடவுளாலும் கைவிடப்பட்ட வேதமாயிருந்தால் அதன் பிரமாணம் எம்மட்டு?

சாக்ஷியம் ஒன்றுமில்லை.

அது எப்படியாகிலும் ஆகுக. இவ்விதம் தமிழ் வேதங்கள் இருந்தனவென்பதற்குப் பிரமாணம் யாது? தர்க்கநூலில் பிரமாணம் மூவகையென்று சொல்லப்பட்டிருக்கிறது. அதாவது பிரத்தியக்ஷம்இந்திரியங்களால் காண்டல் (Perception) சப்தம் சொல் (Verbal Knowledge) அநுமானம்-ஊகித்தல் (Inference.) சுருதி, யுக்தி, அநுபவம் என்றுசொல்வாருமுண்டு. இவ்வளவைகளில் எதை வைத்துப் பார்த்தாலும் தமிழ்நான்மறைகள் இருந்ததாகச் சொல்லமுடியாது. தமிழ்மறைகளோ பிரத்தியக்ஷமாய் காணப்படவில்லை. அவைகளைப்பற்றி எக்காலத்து நூல்களிலும் எவ்விதக் கூற்றும் கிடையாது. அவைகளிலிருந்து மேற்கோள்களும் எங்கும் கொடுக்கப்படவில்லை. ஆகவே இதன்முன்னும் அவைகளை யாரும் பிரத்தியக்ஷத்தில் கண்டதாகத் தெரியவில்லை. அநுமான அளவையாலும் அவை இருந்தனவென்பதற்குப் போதியசான்று இல்லை. வேதங்கள் இருந்தால் வேதாங்கங்கள் வேண்டும்; அல்லது எதாவது ஒரு உரையாவது வேண்டும். இவைகளும் வெள்ளத்தில் அழிந்து போயினவோ? இவைகளும் போய்விட்டால் எஞ்சியநூல்கள்யாவை? அவைகளிலாவது தமிழ்மறைகளைப் பற்றிப் பேச்சுண்டா? இருப்பதாகக் காணேம். இந்நிலைமையில் தமிழ் வேதம் இருந்ததெனச் சாதிப்பது வீண்வாதமே.

ஆகையால், வடக்கத்தியாருக்கும் தெற்கத்தியாருக்கும் பாஷைவேறானாலும், சமயம் ஒன்றே. அச்சமயத்தின் முக்கியப்பிரமாணம் அதாவது வேதம் ஒன்றே. அது வடமொழியிலேயே இருக்கிறது. அவ்வாறே தெற்கத்தியாருடைய ஆகமங்களும் தந்தரங்களும், பத்ததிகளும் வடமொழியில்தானிருந்து வருகின்றன. சைவசித்தாந்தத்தின் முதநூலாகிய சிவஞானபோதமே முதன்முதல் வடமொழியிற்றானெழுதப்பட்டது.

நாகரிகம் ஒன்றே.

சமயத்தையொட்டியே நாகரிகமும், பழக்கவொழுக்கங்களும் இருக்குமாதலால், இவைகளைப்பற்றிக் கூறும் நூல்களும் ஓரளவில் வடமொழியிலிருந்து பெறப்பெற்றன.

அப்பர் சாக்ஷியம்.

இவ்வாறாக வடமொழித்தொடர்பு தமிழ்மக்களுக்கு இன்றியமையாததாய் இருந்து வந்ததாலும், வடக்கத்தியார்க்கும் தெற்கத்தியார்க்கும், சமயம், ஆசாரம், நாகரிகம் முதலியவை பெரும்பாலும் பொதுவாய் இருந்து வந்தமையாலும், இவைகளை வற்புறுத்தக்கருதி திருநாவுக்கரசுஸ்வாமிகள்

'வடமொழியுந் தென்றமிழும் மறைகளுநான் [கும்
ஆனவன் காண்'

என்று இருதிறத்தார்க்கும் என்றும் எழுத்தமாய் நிற்கும் கடவுள் ஒருவரே என்று உணர்த்தினார். (வரும்.)

அடைவுநகை விற்பனவு விளம்பரம்.

1893-ம் ஆண்டின் 8-ம் இலக்கக் கட்டளைச் சட்டத்தின்படி லைசென்ஸ்பெற்று அடைவு பிடிக்கும் திரிகோணமலை 8-ம் நம்பர்க் காசுக்கடைவீதி வெற்றிவேலு கனகசபை என்பவரிடம் அடைவுவைக்கப்பட்டு இப்போது தவணைதப்பி மேற்படி சட்டத்தின் 12-ம் பிரிவின்படி பிரசித்தஏலத்தில் விற்கப்படவேண்டிய நகைகளின் விபரம்:—

1928ஆ 12-ம் ௴.

நம்.	உ	ரூ.	ச.	நகைகளின் விபரம்.
3613	22	15		சிரகப்பூவுடன் 5பட்டுமணி 1
3727	24	15		பவுண் 1உடன் பொ கொடி 1
4372	7	100		பொன் 6பட்டு மாலை 1
4395		7		வெ எஸ் கறணை சோடி 1
5790	1	22		வெ பாதசரம் சோடி 1
5792		12		உட்கட்டு 1க்கு நட்டு 22
5839	2	22	04	பொன் தா[illegible]கொடி 1
5844		6		குப்பிக்[illegible]ன்சோடி 2
5867		10		கைகவி[illegible] 1
5883	3	40	04	பத [illegible]பூராணட்டியல் 1
5895		11	04	தங்கக்[illegible]ப்பு சோடி 1
5896		10	04	ஒருகல்[illegible]சொருகுதோடு [illegible] 1
5906		8	04	வெ [illegible]லுசு சோடி 1
5940	4	9		நட்டுக்கி[illegible]1க்கு நட்டு 68
5980	5	28		பொன் தா[illegible]க்கொடி 1
6036	6	6	50	பொன் செருகுதோடு சோ1
6058		15		இ கல்மோதிரம் 1
6103	7	8		வெ தண்டை சோடி 1
6107		12	03	வெ கொலுசு சோடி 1
6112		6	25	மெட்டி சோடி 1
6144	8	6	50	சிறு சாமந்திப்பூ 1
6160		11	04	வேலைசெய்ததங்கப்பவுண் 1
6191	9	45		பொன் தாலிக்கொடி 1
6205		12		பலவிதமணி 1க்கு மணி 40
6215		26	04	தங்க அரைஞாண் 1
6218		30	04	சம்பாதவளையல் 2
6244		18		பொன் தாலிக்கொடி 1
6299	10	13		இ சிகப்புக்கடுக்கன்சோடி 1
6301		37		சிறு எஸ் காப்பு சோடி 1
6315		70		பட்டக்காப்பு சோடி 1
6327	11	8		வெ எஸ் கறணை சோடி 1
6341		13		வளையல் 8
6362		6		வெ கறணை சோடி 1
6375	12	7		வெள்மட்டமணி 28
6382		80		டி கற்பிப்பூராணட்டியல் 1
6391		30		பலவித 2பட்டு மணி 1 வெ பாதசரம் சோடி 1
6442	13	11		கொப்புச்சிமிக்கி சோடி 1 வளையல் 5
6462		15		சிறு சம்பாதவளையல் 1
6510	15	22	04	பின்னல்காப்பு சோடி 1
6515		8		வளையல் 6
6546		7		வெ குழற்காப்பு சோடி 1
6564		18		சவுக்கமணி 1க்கு மணி 22
6572		20		வெ பாதசரம் சோடி 1
6591	16	15		மோதிரம் 1 வெ 2பட்டரைஞாண் 1
6610		6		பொன் தோடு சோடி 1
6665	17	8	04	வெ ½ கொத்துக்காப்பு சோடி 1
6680		25		பொன் சறடு 1, சிறு சாமந்திப்பூ 1, சற்தோடு சோ 1
6681		10	04	தங்கக்காப்பு சோடி 1
6683		45	04	பீலிக்காப்பு சோடி 1
6694		15	04	சவடிமுகப்புடன் மணி 8, அருமணி12,சவுக்கமணி12
6703		32		பொன் தாலிக்கொடி 1
6708		20		பொட்டு 2 பிறை1-ம் திருமணி 20 உடன் பின்னல் கொடி 1
6729	18	17		வெ பழையபாதசரம் சோ1
6743		60	12	சிங்கமுகக்காப்பு சோடி 1, வெ பாதசரம் சோடி 1
6800	19	13		சிறு இ கல்காதோலை சோ1
6804		7	50	பொன் செருகுதோடு சோ1
6852	20	11		சொரு வைத்த தங்கப் பவுண் 1
6880	21	16		வெ பழைய பாதசரம் 1
6881		10		மோதிரம் 1
6899		18		குவளைக்கடுக்கன் சோடி 1
6905		11		சிறு பூசாத்திரமுடன் மணி 4, சவுக்கமணி 20
6920	22	40		பீலிக்காப்பு சோடி 1
6954		15		தங்கக்காப்பு சோடி 1
7006	23	12		வெ பாதசரம் சோடி 1
70 8		6		வெ சங்கிலி 1
7047	24	22		இ காதோலை சோடி 1
7107		10		தங்கப்பவுண் 1
7140	25	41	04	தங்கப்பவுண் 4
7229	27	6		சிறு ஒருகல் செருகுதோடு சோடி 1
7257		55	04	வே செ பவுணுடன்சங்கிலி 1
7274	28	8		பலவிதமணி 1க்கு மணி 24 கைவிலங்கு 1
7280		12		சவடிமுகப்புடன் மணி 18
7284		35		கர்ப்பிப்பூராணட்டியல் 1
7288		10	04	சொருசா கல்மோதிரம் 1
7301		10		திருகுபூ 1
7333	29	10		இ கல்மோதிரம் 1
7347		50	04	5பட்டு மணிக்கோர்வை 1
7353		10		மோதிரம் 1
7361		100		பொன் தரிசு சோடி 1
7387		7		மணியட்டியல் 1
7437	30	18		½ பவுண்பொத்தான் 3
7509	31	6		வெ பூட்டுக்காப்பு சோடி 1
7543		15		தோடு சோடி 1
7553		70		இ பத சங்கிலியட்டியல் 1

விற்பனவு:—பிரமோதூதஙூ ஆவணிமீ 19-ந் திகதிக்குச்சரியான 1930-ம் ஆண்டு செப்டெம்பர் மாசம் 4-ந் திகதி வியாழக்கிழமை காலை 8மணி தொடக்கம் ஏடுபட்ட நகை புறநீக்கலாக மிகுதி ஷை கடையில் பிரசித்தவலத்தில் விற்கப்படும்.

வி பொ விசுவநாதஉடையார்,
வெக்சிஸ்யேஸ்தர்.

11-8-30.
(Mis 35 18 & 21)

குருநாக்கல் சைவமகாசபை.

நிகழும் பிரமோதூத ஆடித்திங்கள் கஎ-ம் நாள் (1-8-30) வெள்ளிக்கிழமை பின்னேரம் 6½ மணியளவில் மேற்படி சபையொன்று குருநாக்கல் கதிர்வேலாயுதசுவாமிகோவில்மண்டபத்திற் கூடியது. அன்றையத்தினமோ, அகண்டாகாரசித்த வியாபகசச்சிதானந்தப்பிழம்பாகிய சிவபிரானால் 'வன்றொண்டன்' என்றழைக்கப்பட்ட சமயகுரவர்களுளொருவராகும் சுந்தரமூர்த்திநாயனாருடைய குருபூசைத் தினமாதலால், கதிரேசப்பெருமானுக்கு விசேடபூசையும், மேற்படி நாயனாருக்குக் குருபூசையும் சபைப்பொறுப்பில நடைபெற்றது. பின் விபூதி, சந்தனம் முதலிய பிரசாதங்கள் உதவப்பட்டதும் சபை கலைந்தது. -கடி த.

சுந்தரமூர்த்திசுவாமிகள் குருபூசை.

சென்ற ஆடி மீ 17ௗ 1-8-30) வெள்ளிக்கிழமை சுந்தரமூர்த்திசுவாமிகள் குருபூசை சுழிபு[illegible] விக்ரோறியாக்கல்லூரி றிச்வேமண்டபத்தில் நடந்தது. அன்று காலை 7 மணியளவில் சுவாமிகள் பூசை ஆரம்பமாகி 8 மணியளவில் இடபவாகனத்திலெழுந்தருளச்செய்து அயற்கிராமங்களெல்லாம் ஊர்வலம் வந்து 11 மணியளவில் மேற்படி மண்டபம் சேர்ந்து தீபாராதனை நடந்தது. அன்று பிற்பகல் 2மணியளவில் ஸ்ரீ தாமோதரம்பிள்ளை B A. அவர்களால் பக்கவாத்தியத்துடன் தேவாரதிருவாசகம் முதலான அருட்பாக்கள் மிகவும் இனிமையாகப்பாடப்பட்டது. அதன்பின்னர் ஸ்ரீமான் சிவபாதசுந்தரம்பிள்ளை B A அவர்கள் ஓர் சொற்பொழிவுசெய்து 4 மணியளவில் கூட்டம் முற்றுப்பெற்றது. இத்திருத்தொண்டு ஸ்ரீமான் சிவபாதசுந்தரம்பிள்ளை தலைமை உபாத்தியாயர் அவர்களாலும், மற்றும் உபாத்தியாயர்கள், பிள்ளைகளாலும் நடைபெற்றது -கடி ச.

கடவுட்டியானமுள்ள உத்தமக்கற்பாஸ்திரியின் சரித்திரம்.

[முற்றொடர்]

அப்பொழுது சர்வலோகைக பரமேஸ்வரமூர்த்தி இரத்தின அம்பாளுடைய கற்பை மகிழ்ந்து மனமிரங்கி அவளுக்குத் தரிசனங் கொடுக்கவும், அவளது புண்ணிய விசேடத்தால் லோபியாகிய அவளது நாயகனும் பரிசுத்தனாகவும் ஓர் திருவிளையாடலைச் செய்யத் திருவுளங்கொண்டு, அவர்களது முழங்கால் நனைவதற்கு முன்னரே பண்டார வேடங்கொண்டு அந்த லோபியின் முன் தோன்றி "மகாப்பிரபு! அறம்விலவாதபண்டாரமென்று சங்கல்பதட்சணை பாலனுதேஹி" என்று சொல்லவே (ஐயோ) என்று பத்துக்காத தூரம் போய் நான்கு பக்கமும் சுற்றிப்பார்த்துவிட்டுத் தீர்த்தத்தில் இறங்கினர்கள் காசி விசுவநாதன் அந்த அற்ப லோபியை சும்மாவிட்டுவிடுவாரா அவ்விடத்திலும் அவனுக்கு முன் தோன்றவே அங்கிருந்தும் ஓடி மனுஷ சஞ்சாரமில்லாத ஓரிடத்தை யடைந்து அங்கேயாவது பணச்செலவில்லாமல் தீர்த்தமாடலாமென்றிறங்கினர்கள் அவர்கள் முழுகுந் தருணத்தில் "மகாப்பிரபு! சங்கல்பதட்சணை காசாவது கொடுக்காமல் தீர்த்தமாடக் கூடாது" என்று கூற "அட இழவே! இவன் தண்ணீருக்குள்ளாகவே வந்துவிட்டானு" என்று ஆலோசித்து காசொன்று கொடுக்கிறதென்று மனதில் யோசித்துக்கொண்டிருக்கும்பொழுது, "பிரபுவே நீங்கள் தட்சணை இங்கே கொடுக்கவேண்டாம். காலணாவையும் உங்கள் வீட்டில் வந்து வாங்கிக் கொள்ளுகிறேன் கங்காதீர்த்தத்தை எடுத்துத் தத்தஞ் செய்து கொடுங்கள்" என்றார் உடனே செக்கையர் "இவனுவது எங்கள் வீட்டிற்கு வரவாவது காலணாக்காசுக்காக எத்தமடையனுவது இவ்வளவுதூரம்வருவானு" என்றுநினைத்து கையினால் தண்ணீரையெடுத்து பண்டாரத்திற்குத் தத்தஞ் செய்தபின் தீர்த்தமாடி சந்தோஷத்துடன் வீடுவந்து சேர்ந்தான்.

வீடுவந்து சேர்ந்து கதவைத் தாளிட்டபின் தேக சுகத்திற்காக கட்டிலின்மேல் சாய்ந்து படுத்தாரோ இல்லையோ, உடனே கதவை யாரோ "படீர், படீர்" என்று தட்டினர்கள்.

ஆரங்கே என்று இரத்தின அம்பாள் கேட்க "அறம் விலவாத பண்டாரமென்று, பாலனுதட்சணுதேஹி" என்று பதில் கூற, செக்கையர் "அட இழவே! இவன் இங்கும் வந்துவிட்டானே! அடியே! நான் செத்த பிரேதம்போல் இருக்கின்றேன், நீ கதவைத் திறந்துகொண்டு அழுது தெருவிற்போய் புழுதியில் விழுந்து புரண்டு கதறு" என்று சொன்னான் அவளுக்கோ இன்னது சொல்வதென்று புலப்படவில்லை. "கடவுளே! இவ்வுலகத்தில் இப்பேர்ப்பட்ட லோபியும் இருப்பாரோ? இவரோ எனது நாயகன், குலமகட்கழகு கொழுநனைப்பேணுவது என்று பிராட்டியாரும் சொல்லியிருக்கிறாரல்லவா" என்று மனதில் நினைத்து "கடவுளே! நீ தான் எனக்கு அருள் செய்ய வேண்டும்" என்று கதவைத் திறந்து அழத்தொடங்கினள். பண்டாரமும் விடாமுண்டனாய் அவளோடு உள்ளே புகுந்து 'அம்மா உங்கட்கு புத்திரப் பேறுண்டா" எனக்கேட்டார்; இல்லையென்று இரத்தின அம்பாள் பதில்கூற, நானே உங்கட்குப் புத்திரனாகவிருந்து செய்யவேண்டிய கருமங்களை நடத்தி உனது நாயகனின் ஆத்மாவிற்குப் பிரீதி செய்கிறேன் என்று சொல்லி; லோபியை பாடையில் வைத்துக் கட்டிச் சுடுகாட்டிற்குக் கொண்டுபோனன். கொள்ளியும் இட்டாய்விட்டது லோபி அப்பொழுதும் வாயைத் திறந்தானில்லை நெருப்பு எரிந்து அவன் உடம்பில் கிட்டிய உடனே அவன் ஐயோ என்று குழறிக்கொண்டு கீழே குதித்தான். பண்டாரமோ உடனே "பிரபுவே! பாலனுதேஹி, காசு கொடும்" என்றார். ஐயா அடே! நான் சாம்பராய்ப் போயிருந்தால் உனக்கு அந்தக் காலணு எப்படிக் கிடைக்கும் என்று கோபத்தோடு கேட்டார். பண்டாரம "அப்பனே, நீயென்னைச் சாம்பலாண்டியென்று தெரிந்துகொள். நீ சாம்பராய்ப்போயிருந்தால் நான் அதை யெடுத்துப் பூசிக்கொண்டு போயிருப்பேனே" என்று சத்தமிட்டு, அவனைத் தன் சூலத்தால் தொட்டார். செக்கையருக்கு விஸ்வநாதருடைய சூலாயுதம் பட்ட மாத்திரத்தில் அவனுடைய அஞ்ஞானம் நீங்கி மெய்ஞ்ஞானந்தோன்றிவிட்டது ஏதோ இரத்தின அம்பாள் செய்த புண்யத்தால் இவருக்கு இவ்வளவு பதவி கிடைத்துவிட்டது செக்கையர் ஈஸ்வரனிடத்துப் பக்தி அன்பே உருவமானவராய் கண்களில் ஆனந்த பாஷ்பஞ் சொரிய ஆநந்தபரவசனாகி, தன் சொத்து முழுவதையும் காசிவிஸ்வநாதருக்கு எழுதி வைத்து அன்று தொட்டு மெய்ஞ்ஞான சொரூபனாய் விளங்கி முடிவில் மோட்சத்தை யடைந்தார் இரத்தின அம்மாளும் மாங்கல்யத்தோடு புருஷனது மரணத்திற்கு முன் பெருமானுடைய திருவடிநிழலை யடைந்தாள்

இரத்தின அம்பாள் தன் கணவனுடைய தாழ்ந்த குணத்திற்காக அவனை இகழ்ந்து வெறுக்காது, அவனையே கடவுளாக நம்பி நடந்து வந்த கற்பின் மகத்துவமல்லவா இருவருக்கும் கிடைத்தற்கரிய பதவியைக்கொடுத்தது ஆகையால் கற்பினை உயிரினும் இனிய தாய்க் கருதி யொழுகி இவ்வுலகில் அழியாப் புகழையும், மறுமையில் பேரின்பச் செல்வத்தையும் பெற முயல்வோமாக.

ச. பொன்னுஸ்வாமிக்குருக்கள்
அம்மன் கோயில்
சுதுமலை

இந்திய செய்திகள்.

:*0*:

காங்கிரஸ் காரிய நிர்வாகசபை.

நிறைவேற்றிய தீர்மானங்கள்.

அகில இந்திய காங்கிரஸ் காரிய சபையின் கூட்டம் ஜூலை 30, 31, ஆகஸ்ட் முதல்தேதிகளில் பம்பாயில் சர்தார் படேல் தலைமையில கூடிற்று. மொத்தம் 14தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன காங்கிரஸ் சபையார் எதிர்பார்ப்பதற்கு அதிகமாக தேச மஹாசனங்கள் தேசியப் போராட்டத்திற்கு ஆதரவு காட்டியதற்காக அவர்களுக்கு வந்தனமளித்தனர். சட்டசபைகளைப் பகிஷ்கரிக்கவேண்டுமென்றும், இயக்கத்தைத் தீவிரமாக நடத்தவேண்டுமென்றும், வரிகொடா இயக்கத்தையும் பரவச் செய்யவேண்டுமென்றும் தீர்மானிக்கப் பட்டிருக்கின்றன

பகிஷ்கார இயக்கத்தின் பலன்.

சீமை மில்களுக்கு ஆபத்து.

ஆமதபாத்திலுள்ள பிரபல தொழிற்சாலைத் தலைவர் ஒருவருக்கு லங்காஷயரிலுள்ள தொழிற்சாலைத் தலைவர் அச்சியத் துணிகளை இந்தியா பகிஷ்காரம் செய்து வருவதால் சீமை மில்களுக்கு ஏற்பட்டு வரும் ஆபத்தைப் பற்றி ஒரு கடிதம எழுதியுள்ளார் அதன் சாரம்சம் பின்வருமாறு:—உங்களுடைய பகிஷ்காரஇயக்கத்தால லங்காஷயர் கடனில் மூழ்கி வருகிறது பல தொழிற்சாலைகள் பாகஸ்தர்களிடம் அடகு வைக்கப்பட்டிருக்கின்றன மில்கள் ஒவ்வொரு வாரமும் குறைந்த விலைக்கு ஏலத்தில் விடப்படுகின்றன இரண்டுலட்சத்து முப்பதேழாயிரம் பவுன் மூலதனத்தையுடைய ஒரு தொழிற்சாலை சமீபத்தில் இருபத்திராயிரம் பவுனுக்கு ஏலத்தில் விடப்பட்டது இதைக் கண்டால் அழவேண்டியிருக்கிறது சிலவருஷங்களுக்கு முன் பெரிய சீமான்களாக இருந்தவர்கள் இப்போது ஏழைகளாய் அலைகின்றனர் அப்படிப்பட்ட நிலைமையை அடைந்துவிட்ட சிலர் தற்கொலையும் செய்து கொள்கின்றனர்.

லிவர்பூல் உப்புக்கு ஆபத்து.

வங்காளத்தைச் சேர்ந்த ராங்பூர் புகைரதஸ்தானக் கிடங்கில் ஜூலை 30ம் திகதியன்று இறக்கப்பட்ட 200 மூட்டை லிவர்பூல் உப்பு, எந்த இடத்துக்குப் போய்ச் சேரவேண்டுமோ அங்கு எடுத்துச் செல்ல கூலிகளோ வண்டிகளோ அகப்படவில்லை இதற்குக் காரணம் காங்கிரஸ் தொண்டர்கள் செய்த மறியலே யாகும் இதனால் தொண்டர் தலைவரையும் மற்றுங் காங்கிரஸ் நிர்வாகிகளையும் இம் மாதம் முதல்தேதியன்று கைதுசெய்தனர்.

ஜெயில்சொத்து யாருடையது.

மஹாத்மா வியாக்யானம்.

மகாத்மா காந்தி சிறையிலிருந்து எழுதும் கடிதங்களை சிறு சிறு துண்டுக் கடிதங்களில் எழுதி யனுப்புவதன் காரணமென்னவென்று சிறுவர்கள எழுதிக்கேட்டதற்கு மகாத்மா அளித்துள்ள பதிலின் சாராம்சமாவது:—கைதிகள் எல்லாப் பொருள்களையும் கூடியவரை குறைந்த அளவிலேயே செலவு செய்யவேண்டும நான் பிறர்பொருளை ஏற்காததன்மையை அனுஷ்டித்து வருவதால் எல்லோருடைய சொத்துக்களையும் பாதுகாக்கும்படி டிரஸ்டி என்னும் நிலைமையில இருக்கின்றேன். சிறைச் சொத்துக்களும நமது பணத்தைக் கொண்டு வாங்கப்பட்ட நமது சொத்துக்கள்தானே. நமது நாட்டைப்போன்ற ஒரு ஏழைநாட்டில அப்பொருள்களை சிக்கனமாகவே செலவு செய்ய வேண்டும. "ஆனந்தபோதினி"

சிவஞானபோதத் தெளிவுரை.

10000 பிரதிகள்

இலவசமாகக் கொடுத்தல்.

நாம இந்தத் தருமத்தைச் செய்வதற்கு முன்வந்தது சைவாபிமானச் செல்வர்களின் உதவி கிடைக்குமென்னும் நோக்கம் கருதியேயாம். 1500 ரூபாவுக்குமேல் செலவு செய்யவேண்டி யிருக்கின்றது. இவ்வேண்டுகோளை வாசிக்கும ஒவ்வொருவரும் ஒவ்வொரு ரூபாதானும் எமக்கு அல்லது இந்துசாதன மனேஜருக்கு அனுப்பினுல் இத்தருமம் இனிது நிறைவேறுவதாகும். ஒரு ரூபா ஒருவருக்குப் பெரியதொகையல்ல இதைஉத்தேசித்தே நாம் முன் பத்திரிகைப் பிரசுரம் ஒன்றனுடன் எம்மாலியற்றப்பெற்ற திருநல்லைத் திருப்புகழ்நாதி யொவ்வொன்று அனுப்பியுள்ளேம். ஆகையால் இம மேலான புண்ணியத்தில் பங்குபற்றுவதற்காகவும் எடுத்த இக் கைங்கரியத்தை நாம் முடிப்பதற்கு துணைபுரிவதற்காகவும் ஒருரூபாவிலிருந்து அதற்கு மேற்பட்ட எததொகையை யாவது எமக்கு அல்லது இப்பத்திரிகை மனேசருக்கு அனுப்புமாறுவேண்டுகிறேன்.

இப்படிக்கு,
8-4-30. வண்: வை. இராமநாதன்.
இந்துசாதனக் காரியாலயம்.
(Mis. 1246.

தமிழ்ஹோம்
கொழும்பு.

யவ்வயின் கொற்றேச் நம். 107 'கல்[illegible]ரூவ் ரேட்டு'கோட்டடித் தெருவுக்கு இப்போ மாறிவிட்டது.
(Mis. 29 7, & 14& 18)

எங்கே போகலாம்?

நமது யாழ்ப்பாணவாசிகள் அரிசிகுத்தும ஆலைகளினுதவியால் அநேக சுகயங்களை அனுபவிக்கின்றனர். எங்கள் கிராமவாசிகள் இந்தச் சுகயங்களைத் தாராளமாய் அனுபவித்தற்கு எங்கே போகலாம்.

சுன்னுகத்து அன்னபூரணி அரிசி ஆலைக்கே போகலாம்? அது தன் வாயிலாகத் தானியங்களைக் குத்தியும் தவிடாக்கியுந் தருகின்றது.

இன்னும் அது அரிசி, நெல், தவிடு விற்பனையுஞ் செய்கின்றது. ஆதலால் நாமும் சுன்னுகம் அன்னபூரணி அரிசி ஆலைக்கே போய்ப் பூரணத்தைப் பெறுவோமாக.

(Q. I4 31-8-30. நி.)

ஸம்ஸ்கிருத வித்தியாசாலை விளம்பரம்.

"ஸ்ரீ கமலாம்பிகாஸமேத ஸ்ரீ கயிலாசநாதஸ்வாமி தேவஸ்தான, வேத, ஆகம ஜோதிஷ,காவ்ய,புராண,வித்தியாசாலை"என்னும்,நாமத்தையுடைய வித்தியாசாலையொன்று மேற்படி தேவஸ்தானத்தில் ஸ்தாபிக்கப்பட்டு நிகழும் பிரமோதூத ஆடிமீ க-ந் திகதி தொடக்கம் நடைபெற்று வருகின்றது. இலவசமாக அன்ன வஸ்திரம் பெற்றுக்கொண்டு சேரவிரும்புவோர் இந்த மாதம் உo-ந் திகதி வரையிலும் ஏனையோர் பின்னும் விண்ணப்பப் பத்திரம் அனுப்பலாம். அச்சிட்ட விண்ணப்பப் பத்திரங்கள் மேற்படிவித்தியாசாலை ஸ்தாபகர் ப்ரம்மஸ்ரீ ந. வே. கார்த்திகேயக்குருக்கள் (தம்பையாக்குருக்கள்) அவர்களிடம் எழுத்துமூலமாய் அல்லது அவருடைய காரியாலயத்தில் முகாமுகமாய்ப் பெறற்பாலன. [illegible] தெரிவுசெய்யப்பட்ட முதல் 12 மாணவர் களுமே இலவசப் போஷணையும் கல்வியும் பெறுவர்.

நல்லூர், 20-7-30.
(M. 1. 21st to 21-8-30.)

பிரசித்த வல்விற்பனை.

கொழும்பு டிஸ்திரிக்கோட்டின் 39373-ம் நம்பர் வழக்கில் டிகிரித்தீர்ப்பின்படி

கொழும்பு செட்டித்தெரு 139-ம் நம்பரிலிருக்கும் ஆர். எம். எஸ். ஆர். எம். ராமநாதன்செட்டியார் வழக்காளி

எதிராக 1. பொன்னம்மாவும் புருஷன் 2. பெரியநாயகம் அருணாசலமும் ஆகிய இருவரும் கொழும்பு கூறுவை தெருவில் வசிப்பு-எதிராளிகள்.

மேற்படி வழக்கில் எனக்குக் கிடைத்திருக்கும் அதிகாரத்தின் பேரில் 1930 ஆகஸ்டமீ 23-ந் திகதி சனிக்கிழமை என்னல் பிரசித்த ஏலத்தில் விற்படுங்காணிகள் அதாவது:—

1. இதே இடத்தில் பிற்பகல் 2மணியளவில் யாழ்ப்பாணம் டிஸ்திரிக் வலிகாமம் மேற்கு, மானிப்பாய் கோவிற்பற்று, நவாலியிறை அட்டகிரியும் பிரிவுகளும் நெற்பரப்பு 20லாச்சம் உடன் மேற்குப் பக்கத்தில் கிணறு முப்பங்கும்,

2. இதே இடத்தில் பிற்பகல் 3 மணிய வில் மேற்படி நவாலியிறை தளவத்துடியி பும் பிரிவுகளும் 17லாச்சம், 15குழி நில பரப்பில் பிரிவிடாத9லாச்சம் நிலப்பரப்பும், கட்டடப்பங்கு நீங்கலாக, மேற்குப் பக்கத்தில் கிணற்றுப்பங்குர், கிழக்குப்பகுதியுடைய வருத்த கிணற்றுக்குப்போதும் வழிப்பாவிப்பு உருந்து நீங்கலாக.

ரு 2411/85ம் மேலும் வட்டியும் கோட்டுச் செலவும் அறவிடும்படியாகவேயாம்.

சீ. ஆர். தம்பையா
கந்தோர் நம்பர் 4, கோமிஷனர்
ஹல்ஸ்டோர்ப் தெரு,
கொழும்பு 2—8—30.
Mis. 34 14 & 18.)

ஜவாஹிருல் முபர்ரா லேகியம்.

ஒரேவேளையில் பரீட்சைபார்க்கலாம்.

பலமில்லாமல் தளர்ந்த சோர்வடைந்த நரம்புகளையும் உலகவாழ்க்கையில் பிரியமில்லாமல் சஞ்சலப்படும் மனதையும் ஒரே வேளை லேகியம சாப்பிட்டபிறகு ஆச்சரியப்படும்படி நரம்புகளுக்கும் பலமும் திமிரும் உண்டாகும்.

பரீட்சைக்கும் பலனுக்கும் உத்தரவாதமுள்ள [illegible]த்திய அவுஷதம், சொப்பன ஸ்கலிதம், [illegible]ரிரஸ்கலிதம, பற்பல வாய்வு ரோகங்கள், இடுப்புவலி, கைகாலசதி, மலசிக்கல் பசி மந்தம் தேகாங்கமையில்நீற்றப்போகும் பலஹீனங்கள் முதலிய யாவற்றையும் குணப்படுத்தும். பத்தியமில்லை. உபயோகவிபரம் மருந்துடன் வரும் வி பி வேறு.

20நாள் 40நாள் டப்பி 1க்கு விலை ரு 4-00.
10நாள் 20வேளை டப்பி1க்கு விலை ரு 2-20.

மேலே சொல்லப்பட்ட வியாதிகளையும் இதில் சொல்லப்படாத வியாதிகளையும் கண்டிக்கும்.

பிரமேக சங்கார சஞ்சீவி எண்ணெய்.

கருங்குஷ்டம் வெண்குஷ்டம் பிரமேகம்21ம் குட்டிக்கும் விஷக்கடிகள் நீரும் சொப்பம் தரிக்கும் சேர் 1க்கு ரு 2-8-0.

வி. பி, வேறு
K. V. Vappadurai & Co.,
Portonove,
S. I.
(Y. 2. 14to 13-8-31)

நெல்லுக்குற்றும் கையந்திரம்.

"ஜூபவத்தா" முறை.

14279 இலக்க உரிமைப்பதிவு பெற்றது.

(1) ஒவ்வொன்றாக நெல்லை உடைத்தால் அரிசி எவ்விதம் உருமாறாது இருக்கின்றதோ அவ்விதம் செய்வது இந்த யந்திரத்தின் விசேட இலக்கணம்.

(2) இந்த யந்திரத்தைப் பாவிப்பதினால் சப்பட்டையைத் தூளாக்கல் உடைதல் முதலிய அநேக சேதங்கள் தவிர்க்கப்படுகின்றன. இதனால் பெருத்த லாபம் உண்டு.

(3) அரிசியிலே போஷிப்புக்குரிய பகுதியை இது நீக்காது காத்துக்கொள்கின்றது. மற்றைய யந்திரங்களினால் இது முடியாதாகும்.

இந்த யந்திரத்தைத் தொழிற் படுத்தல் மிக இலகுவும் சிக்கற்றதுமாகும். முழு விபரமும் கொடுபடும். இரண்டு பேருக்கு வேலை, ஒரு மணி நேரத்தில் 25 புசல் நெல்லுக் குற்றப்படும்.

(4) எம்மிடம் ஒழுங்கு செய்து இதைச் சோதனை செய்து பார்க்கலாம்.

(5) விலை ரு 110=கொழும்பிலே புகையிரதத்தில் ஏற்றிக் கொடுக்கலாம்.

J. W. A. கதிர்காமர்,
(வட, கிழ், வடமத்திய, வடமேல் மாகாணங்களின் காரியாதிகாரி (ஏஜென்ட்)
மானிப்பாய் யாழ்ப்பாணம்.
M. 3. 11 to 10 9-30)

வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க
மன்னன், கோன்முறை யரசுசெய்க குறை
விலா துயிர்கள்வாழ்க, நான்மறை யறங்க
ளோங்க நற்றவம் வேள்விமல்க, மேன்மைகொள்
சைவநீதி விளங்குக வுலகமெல்லாம்.

Printed& published by Pandit V. T. Sambhandan for and on behalf of the Proprietors, the Jaffna Siva Paripalana Sabai, Jaffna, at the Saiva Prakasa Press, Vannarponnai.